# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**<u>விசாரணை நாள் 10.07.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண் SA 13166-E-2024</u>**

திரு சொ.குமார் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்,
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மை துறை
சேப்பாக்கம், சென்னை -5 .. பொது அதிகார அமைப்பு

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2027) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு சொ.குமார் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் உதவி ஆணையர்-6 திருமதி வெ.அல்லி ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 15.07.2024 |

**<u>கோரிய தகவல்</u>**:-

தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு தான் 01.11.2023 நாளிட்டு அனுப்பிய மனு குறித்து 10 இனங்களில் தகவல் கோரியுள்ளார்.

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்பட்டுள்ளது |
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 17.08.2024 |
| சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 04.10.2024 |

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனு தொடர்பாக தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையெனக் கூறி, சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவையும், பின்னர், சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவையும் அனுப்பியுள்ளதை தொடர்ந்து, அம்மனு மீது இன்று விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இவ்வழக்கு குறித்த கோப்புகளை ஆராய்ந்தபோது, மனுதாரர் தலைமைச் செயலாளருக்கு அனுப்பிய 6(1) மனுவில் 10 இனங்களில் கோரிய தகவல்களுக்கு, சென்னை, தலைமைச் செயலகம், பொதுத் (தபால்) துறையின் பொதுத் தகவல் அலுவலர் / பிரிவு அலுவலர் 30.07.2024 அன்று பதில் அனுப்பியுள்ளார். அவற்றில், இனம் 2 முதல் 5 வரையிலுள்ள கேள்விகளுக்கான பதில், சென்னை, தலைமைச் செயலகம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சம்மந்தப்பட்டது என்பதால், அத்துறைக்கு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் 25.07.2024 அன்று மாற்றப்பட்டுள்ளது. பின்னர், அம்மனு, மேற்படி துறையின் பொதுத் தகவல் அலுவலர் / அரசு துணைச் செயலாளரால் சென்னை, சேப்பாக்கத்திலுள்ள கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையருக்கு 06.08.2024 அன்று உரிய நடவடிக்கைகாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

4) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர/ வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் உதவி ஆணையர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து 06.08.2024 அன்று அனுப்பப்பட்ட மனு தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை என ஆணையத்திடம் தெரிவித்தார்.

5) விசாரணையின் முடிவில் இவ்வாணையம் கீழ்க்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது:-

**மனுதாரரின் 6(1) மனுவில் இனம் 2 முதல் 5 வரையிலான தகவல்களை வழங்குமாறு 06.08.2024 நாளிட்டு சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட மனு தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லையென இன்று விசாரணைக்கு ஆஜரான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் உதவி ஆணையர் / பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரின் 6(1) மனுவின் நகலை ஆணையத்திடமிருந்து பெற்று, அதில் இனம் 2 முதல் 5 வரையில் உள்ள கேள்விகளுக்கான உரிய பதிலை மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தின் முன்பாக 20.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென சென்னை, சேப்பாக்கம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் உதவி ஆணையர் / பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் வழக்கு எண் SA 13166-E-2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்,
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மை துறை
சேப்பாக்கம், சென்னை -5

திரு சொ.குமார்
எண்.5, வேம்புலி பண்ணைக்காரன் தெரு,
உள்ளகரம்,
சென்னை - 600 091

Copy to *File*
CR/PA

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590


## விசாரணை நாள் 10.07.2026

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 13166-E-2024**

திரு சொ.குமார் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
உதவி ஆணையர்,
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மை துறை
சேப்பாக்கம், சென்னை -5

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2027) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு சொ.குமார் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் உதவி ஆணையர்-6 திருமதி வெ.அல்லி ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 15.07.2024 |
| **கோரிய தகவல்**:- தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு தான் 01.11.2023 நாளிட்டு அனுப்பிய மனு குறித்து 10 இனங்களில் தகவல் கோரியுள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்பட்டுள்ளது |
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 17.08.2024 |
| சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 04.10.2024 |

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனு தொடர்பாக தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையெனக் கூறி, சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவையும், பின்னர், சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவையும் அனுப்பியுள்ளதை தொடர்ந்து, அம்மனு மீது இன்று விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இவ்வழக்கு குறித்த கோப்புகளை ஆராய்ந்தபோது, மனுதாரர் தலைமைச் செயலாளருக்கு அனுப்பிய 6(1) மனுவில் 10 இனங்களில் கோரிய தகவல்களுக்கு, சென்னை, தலைமைச் செயலகம், பொதுத் (தபால்) துறையின் பொதுத் தகவல் அலுவலர் / பிரிவு அலுவலர் 30.07.2024 அன்று பதில் அனுப்பியுள்ளார். அவற்றில், இனம் 2 முதல் 5 வரையிலுள்ள கேள்விகளுக்கான பதில், சென்னை, தலைமைச் செயலகம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சம்மந்தப்பட்டது என்பதால், அத்துறைக்கு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் 25.07.2024 அன்று மாற்றப்பட்டுள்ளது. பின்னர், அம்மனு, மேற்படி துறையின் பொதுத் தகவல் அலுவலர் / அரசு துணைச் செயலாளரால் சென்னை, சேப்பாக்கத்திலுள்ள கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையருக்கு 06.08.2024 அன்று உரிய நடவடிக்கைகாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

4) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர/ வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் உதவி ஆணையர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து 06.08.2024 அன்று அனுப்பப்பட்ட மனு தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை என ஆணையத்திடம் தெரிவித்தார்.

5) விசாரணையின் முடிவில் இவ்வாணையம் கீழ்க்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது:-

**மனுதாரரின் 6(1) மனுவில் இனம் 2 முதல் 5 வரையிலான தகவல்களை வழங்குமாறு 06.08.2024 நாளிட்டு சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட மனு தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லையென இன்று விசாரணைக்கு ஆஜரான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் உதவி ஆணையர் / பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரின் 6(1) மனுவின் நகலை ஆணையத்திடமிருந்து பெற்று, அதில் இனம் 2 முதல் 5 வரையில் உள்ள கேள்விகளுக்கான உரிய பதிலை மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தின் முன்பாக 20.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென சென்னை, சேப்பாக்கம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் உதவி ஆணையர் / பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் வழக்கு எண் SA 13166-E-2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்,
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மை துறை
சேப்பாக்கம், சென்னை -5

திரு சொ.குமார்
எண்.5, வேம்புலி பண்ணைக்காரன் தெரு,
உள்ளகரம்,
சென்னை - 600 091

Copy to *File*
CR/PA